பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 11 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சிவில் விமான போக்குவரத்துத் துறையில் மகளிரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.
- கேரளா, பஞ்சாப், உத்தரபிரதேச மாநிலங்களுக்கு உட்பட்ட 14 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 13ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இடைத்தேர்தல், வரும் 20ஆம் தேதிக்கு மாற்றப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- இந்தியா – வியட்நாம் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி ஹரியானாவின் அம்பாலாவில் இன்று தொடங்கியது.
- உலக Bridge சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>><<<<**

சிவில் விமான போக்குவரத்துத் துறையில் மகளிரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌதி முர்மு தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்த துறையில் சாதனை படைத்த மகளிரோடு கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுத் துறையில் 15 சதவீதம் பெண்கள் பணிபுரிவதாகவும், விமான பொறியியல் பிரிவில் மகளிரின் பங்களிப்பு 9 சதவீதமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு விமானிகளுக்கான உரிமம் பெற்றதில், 18 சதவீதம் பெண்கள் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

>>>><<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி, நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஜார்க்கண்டில் பிஜேபி ஆட்சிப் பொறுப்பேற்றால், மாநிலத்தின் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களை, மாநில அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கூட்டணி வாக்கு வங்கி அரசியலில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஜார்க்கண்ட் மாநில வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக கூறி, அம்மாநில முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களும் வாக்கு சேகரிகப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக வரும் 13 மற்றும் 20ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை வரும் 23ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கான காலஅவகாசம் இன்று மாலையுடன் நிறைவடைந்ததை அடுத்து, தொகுதி வாரியாக வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

கேரளா, பஞ்சாப், உத்தரபிரதேச மாநிலங்களுக்கு உட்பட்ட 14 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 13ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இடைத்தேர்தல், வரும் 20ஆம் தேதிக்கு மாற்றப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

உத்ராகண்டில் நேரிட்ட சாலை விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர், 19 பேர் காயமடைந்தனர்.

Almora மாவட்டத்திற்கு உட்பட்ட Sult பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து, Kupi அருகே நிலை தடுமாறி பள்ளத்தாக்கில் விழுந்தில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

தேசிய மற்றும் மாநில மீட்புப் படையினர் உள்ளூர் நிர்வாகத்துடன் இணைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்ராகண்ட் ஆளுநர் திரு. குர்மித் சிங், முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் டாமி உட்பட தலைவர்கள் பலர் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

உத்ராகண்ட அரசும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் நிதியுதவி அறிவித்துள்ளது.

>>>><<<<

உயிரி எரிபொருள் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

அபுதாபியில் இன்று தொடங்கிய, சர்வதேச பெட்ரோலிய கண்காட்சி மற்றும் மாநாட்டில், இந்திய அரங்கினை திறந்து வைத்து அவர் பேசினார்.

உயிரி எரிபொருள் பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பசுமை ஹைட்ரஜன் தொடர்பான முன்னெடுப்புகளுக்கும் மத்திய அரசு ஆதரவு அளிப்பதாக அவர் கூறினார்.

இந்த கண்காட்சியில் 54 நாடுகளைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ், இதுவரை 10 லட்சம் கைவினைக் கலைஞர்கள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிறு குறு தொழில்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கைவினைக் கலைஞர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

நிலக்கரி உற்பத்தியை அதிகரித்து, இறக்குமதி குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.

Coal India நிறுவனத்தின் 50வது நிறுவன தினத்தை ஒட்டி, கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நிலக்கரி சுரங்கங்களின் ஏலம் தற்போது வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியிலும் கூடுதல் முதலீடுகள் செய்யப்படுவதாக திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

>>>><<<<

சூரிய மின்சக்தி உற்பத்திக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச சூரிய மின்சக்தி அமைப்பின் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சர்வதேச அளவில் சூரிய மின்சக்தி உற்பத்திக்கான முதலீடுகள் அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியா – வியட்நாட் இடையோன கூட்டு ராணுவப் பயிற்சி ஹரியானாவின் அம்பாலாவில் இன்று தொடங்கியது.

இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த பயிற்சி நடைபெறுகிறது.

இந்திய ராணுவத்தின் சார்பில் 42 பேர் இந்த கூட்டு பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

>>>><<<<

விமானப் படையின் மிக்.29 ரக போர் விமான வழக்கமான பயிற்சியின் போது, இன்று ஆக்ராவில் விபத்துக்குள்ளானது.

விபத்துக்கான காரணங்களை கண்டறிவதற்காக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக விமானப்படை கூறியுள்ளது.

இரண்டு விமானிகளும் பாதுகாப்பாக உயிர் தப்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா, மைசூர் நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் தொடர்பான வழக்கில், நேரில் ஆஜராகுமாறு லோக் ஆயுக்தா நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதன்படி, வரும் 6ஆம் தேதி மைசூர் சென்று, லோக் ஆயுக்தா முன் ஆஜராகவுள்ளதாக திரு. சித்தராமையா Haveri-யில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>><<<<

நாடுமுழுவதும் இதுவரை 98 சதவீத 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கான வசதி ரிசர்வ் வங்கி அலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, இன்று ஜெய்ப்பூரில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பட்ஜெட் தயாரிப்பு குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை, தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் திரு. ஃபரூக் அப்துல்லா இன்று சந்தித்து ஆறுதல் கூறினார்.

காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை வழங்குமாறு மருத்துவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

>>>><<<<

உலக Bridge சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அர்ஜெண்டினாவில் நடைபெற்ற இப்போட்டியின் குழுப் பிரிவில் தங்கப்பதக்கததையும், சீனியர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

>>>><<<<

உலக கிக்பாக்ஸிங் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆஸ்திரியாவின் Vienna-வில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

>>>><<<<

சுவிஸ் ஓப்பன் வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

21 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Gurnoor Singh வெள்ளிப்பதக்கத்தையும், Devanah Singh வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>><<<<

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் Koneru Hunpy மூன்றாவது இடத்தில் உள்ளார்.

>>>><<<<

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் ஏலம், சவுதி அரேபியாவின் ரியாதில், இம்மாத இறுதியில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>END<<<<**